# தூதன்

தூதன்-24 மார்ச் 2015 தூது-03



“... அவன் உயிரோடிருக்கும் சகல நாளும்
அவனைக் கர்த்தருக்கே
ஒப்புக்கொடுக்கிறேன் என்றாள்....”
1 சாமுவேல் 1:28

**தென் இந்தியத் திருச்சபை**
**தமிழ் சபை - துபாய்**

Private Circulation only

# தென் இந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 02 |
| ஆயரம்மா மடல் | 04 |
| உதவி போதகர் மடல் | 06 |
| உதவி ஆயரம்மா மடல் | 08 |
| செயலர் மடல் | 10 |
| கழுதைமேல் இயேசு எருசலேம் வந்தார் | 12 |
| நீங்கள் கிறிஸ்தவரா... | 13 |
| கவிதைச்சோலை | 14 |
| Useful Kitchen Tips | 15 |
| பெற்றோர்களுக்கு... | 16 |
| கர்த்தரின் வார்த்தை | 18 |
| ஆராதனை பாடல்கள் | 19 |
| திருச்சபை ஜெபநாள் | 20 |
| தெரிந்து கொள்வோம் | 22 |
| Youth and Teenagers | 25 |
| Family Devotion | 26 |
| வேதவினா போட்டி | 28 |
| Health Tips | 30 |
| Birthday Celebrants | 35 |
| Wedding Anniversary Celebrants | 37 |



P.O.Box: 8785, Dubai. Ph: 04-2824696, Fax: 04-2826162, Mob: 050-5533645
Website: www. csitamilparishdubai.org, E-mail: csitapar@emirates.net.ae

# சபை போதகர் மடல்

கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே, உலகத்தின் முடிவு பரியந்தம் உங்களோடிருக்கிறேன் என்ற இயேசுவின் இனிய பெயரில் உங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள். இந்த மாதம் அவருக்கு மகிமையாய் வாழ கர்த்தர் அருள் தருவாராக. கல்விக்கூடங்களில் கல்வி கற்கும் பிள்ளைகள் பங்கேற்கும் தேர்வுகள் ஆசீர்வாதமாகவும், வெற்றியையும் உயர்வையும் தருவதாக அமைய ஜெபிக்கிறேன். பிரவேசித்திருக்கும் தபசு நாட்கள் மெய்யான விசுவாசத்திலும், பரிசுத்தத்திலும், நீதியிலும் வளரும் நாட்களாகவும் ஆவியின் கனி நிறைந்த நாட்களாகவும் அமைய கர்த்தருக்குள் நமது வாழ்வை அமைத்துக்கொள்வோம்.

இந்த மாதம் நடைபெறும் VBS நிகழ்வுகளில் ஜெபத்துடன் கலந்து கொள்ளவும் நமது குடும்ப பிள்ளைகளும் அருகாமையில் வளரும் பிள்ளைகளும் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளருகின்ற நிலையில் செயல்படவும் இந்த நாட்களை பயன்படுத்திக்கொள்ள கேட்டுக் கொள்கிறேன். திருமறையை நாம் பார்க்கும்போது "அவர் எருசலேமுக்குள் பிரவேசிக்கையில் நகரத்தார் யாவரும் ஆச்சரியப்பட்டு இவர் யார்? என்று விசாரித்தார்கள்" (மத்தேயு 21:10). திரளான மக்கள் கூட்டமும், சீஷர்களும் இணைந்து எருசலேம் நகருக்குள் பவனியாக பிரவேசிக்கின்றனர். ஓசன்னா ஓசன்னா என்று ஆர்ப்பரிக்கும் சத்தம் பஸ்கா பண்டிகைக்கென்று தங்களை ஆயத்தம் பண்ணிக்கொண்டிருந்த மக்களின் செவிகளில் தொனிக்கின்றது. சாந்தமும் மனத் தாழ்மையுமாக கழுதையின் மீது அமர்ந்து மகிமையோடும் ஆரவாரத்தோடும் வருகின்றாரே இவர் யார்? என்று மக்கள் விசாரிக்கின்றனர். தான் யார் என்பதை பலவகைகளில் அவர் வெளிப்படுத்தியிருந்தும் அவர்கள் அறியாமல் இப்படி கேள்வி கேட்கிறார்கள். அவர் எப்படி தன்னை வெளிப்படுத்தியிருந்தார் என்பதை இந்த நாளில் நாம் சிந்தித்து அவருக்கு மகிமையான பிள்ளைகளாக வாழ கர்த்தர் நமக்கு துணை செய்வாராக. இவர் யார்?

### 1. இரட்சகர்:

நமது ஆண்டவர் இவ்வுலகத்திலே பாலகனாக பிறந்தபோது தேவதூதன் இந்த நற்செய்தியை பெத்லகேம் மேய்ப்பர்களுக்கு அறிவித்தான். தேவதூதன் அவர்களை நோக்கி பயப்படாதிருங்கள். இதோ எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். லூக். 2:10,11. இந்த செய்தி எல்லா ஜனத்துக்கும் உரிய செய்தியாகும். இது தேவதூதனுடைய செய்தியாக, சாட்சியாக உள்ளது. மேலும் பாலகனாக அவர் பிறந்தபோது யோசேப்பிடம் தேவதூதன்,

“இயேசு என்ற பேரிடுவாயாக. ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்” என்றான். மத். 1:21. இயேசு என்ற கிரேக்க பெயருக்கு பொருள் கர்த்தர் இரட்சிக்கிறார் என்பதாகும். ஆம் இயேசுவே இரட்சகர். நம்மை பாவத்திலிருந்து இரட்சிக்கிறார். பாவத்தின் தண்டனையான நித்திய மரணத்திலிருந்து நம்மை இரட்சிக்கிறார். இயேசு தாம் வாழ்ந்த காலத்தில் “மனுஷகுமாரன் ஊழியங்கொள்ளும்படி வராமல் ஊழியம் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாக தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்” மாற்கு 10:45 என்று தெளிவாக குறிப்பிட்டுள்ளார். இன்று அவரை இரட்சகராக அறிந்துள்ள நாம் இரட்சிப்பின் அனுபவத்தோடு அநேகரை இரட்சிப்பின் வழியில் நடத்தி அவரே உலக இரட்சகர் என்பதை சான்றாக்குவோம்.

### 2. தேவ ஆட்டுக்குட்டி :

ஆண்டவர் இவ்வுலகில் மனிதராக அவதரித்தபோது, அவருக்கு வழியை ஆயத்தப்படுத்தும்படி அனுப்பப்பட்டிருந்த முன்தூதன் யோவான் ஸ்நானன். ”...இயேசுவை தன்னிடத்தில் வரக்கண்டு, இதோ உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி என்றான்” யோவான் 1:29. ஆம் அவர் உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்த்தார். பாவம் அறியாத அவர் நமக்காக பாவமாக்கப்பட்டார். உலக மக்கள் அனைவரின் பாவத்தையும் அவர் சிலுவையில் சுமந்து தீர்த்தார். 2 கொரி. 5:21. நாம் சாத்தானின் அடிமைத்தனத்திலிருந்தும், பாவத்தின் சாபத்திலிருந்தும், மரணத்திலிருந்தும் விடுதலை பெற்றோம். பரலோக ராஜ்யத்தின் பிள்ளைகளானோம் என்ற சந்தோஷத்தோடு அவருக்கு மகிமையாக வாழ செயல்படுவோம்.

### 3. தேவ குமாரன் :

ஆண்டவர் ஞானஸ்நானம் பெற்று தண்ணீரை விட்டு கரையேறினவுடனே “இவர் என்னுடைய நேச குமாரன். இவரில் பிரியமாயிருக்கிறேன்” என்று பிதாவாகிய தேவன் வானத்திலிருந்து சாட்சி கொடுத்தார். மத். 3:16,17. ஆனால் இந்த காட்சியையும், மக்கள் உணராமல் இருந்துவிட்டனர். அவர் மேசியாவாக, தேவகுமாரனாக வந்து நம்மோடு வாசம் பண்ணுகிறார். நமக்காக தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்து, நமக்கு நித்திய வாழ்வை சம்பாதித்து தந்து, உலகின் இரட்சகராக செயல்படுகிறார் என்பதை நமது வாழ்வில் கண்டு மற்றவர்களுக்கு சாட்சியாக வாழ்வோம். அவர் யார் என்பதை நமது வாழ்வின் அனுபவங்களினால் மற்றவர்களுக்கு சான்றாக்குவோம். இறையாசி நம்மோடு நிறைவாய் தங்குவதாக.

இறைப்பணியில்,
அருள்திரு. J. ஜெயக்குமார்.
சபை போதகர்.

# ஆயரம்மா மடல்

அன்பானவர்களே உலக மகளிர் தினத்தை கொண்டாடும் இந்த மாதத்தில் உங்கள் அனைவரோடும் தொடர்பு கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். அனைவருக்கும் நமது சபையின் பெண்கள் சார்பில் அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நாளில் ஆண்டவரை தைலத்தால் அபிஷேகம் பண்ணின பெண் குறித்து சிந்தனை செய்ய விரும்புகிறேன்.

"இயேசு பெத்தானியாவில் குஷ்டரோகியாயிருந்த சீமோன் வீட்டில் இருக்கையில் ஒரு ஸ்திரீ விலையேறப் பெற்ற பரிமள தைலமுள்ள வெள்ளைக்கல் பரணியைக் கொண்டு வந்து, அவர் போஜன பந்தியிலிருக்கும்போது அந்த தைலத்தை அவர் சிரசின் மேல் ஊற்றினாள்" மத். 26:6,7.

பெத்தானியா என்னும் இடம் இயேசு இரட்சகரின் நண்பர்களான மார்த்தாள், மரியாள், லாசரு என்பவர்கள் வசித்து வந்த கிராமமாகும். இவர்களுடைய வீட்டில் வரும்போதெல்லாம் மரியாள் அவர் பாதத்தினருகே உட்கார்ந்து அவரது அருள் வார்த்தைகளைக் கேட்பது வழக்கம். பெத்தானியாவில் குஷ்டரோகியாயிருந்து தம்மால் குணம்பெற்ற சீமோன் வீட்டில் இயேசு பந்தியில் அமர்ந்து இருக்கும் வேளையில் ஒரு ஸ்திரீ விலையேறப் பெற்ற வெள்ளைக்கல் பரணியைக் கொண்டு வந்து, அந்த தைலக் குப்பியை உடைத்து ஆண்டவரின் சிரசின்மேல் தைலத்தை ஊற்றுகிறாள். அந்தப் பெண் பெயர் இங்கே சொல்லப்படவில்லை. அவள் மரியாள் தான் என்று பாரம்பரியமாகச் சொல்லப்படுகிறது.

இந்த காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்த சீஷர்கள் "இந்த வீண் செலவு என்னத்திற்கு?" இந்த தைலத்தை உயர்ந்த விலைக்கு விற்று தரித்திரருக்குக் கொடுக்கலாமே என்றார்கள். இதைக் கேட்ட இயேசு புகழ்ந்து கூறுகிறார். அவர் புகழ்ந்து கூறின வார்த்தைகள் இன்றும் அவருடைய பிள்ளைகள் உற்சாக மனதுடன் செயல்பட தூண்டுகின்றவைகளாக இருக்கின்றன என்பதில் ஐயமில்லை. அவர் புகழ்ந்து கூறின வார்த்தைகள் என்னவென்றால்

### 1. நற்கிரியைகளைச் செய்திருக்கிறாள் :

ஆண்டவர் தாம் பட வேண்டிய பாடுகளைக் குறித்துக் கரிசனை கொண்டுள்ள வேளையில் இந்தப் பெண்மணி செய்த காரியம் ஆண்டவருக்கு மிகுந்த மனமகிழ்ச்சியைக் கொடுத்தது. என்னிடத்தில் நற்கிரியைகளைச் செய்திருக்கிறாள் (மாற்கு 14:8) என்று அவளைப் பாராட்டினார்.

இவ்விதமாக நமதாண்டவருக்கு மனமகிழ்ச்சியூட்டும் நல்ல காரியங்களை நாமும் செய்ய வேண்டுமென்று நமதாண்டவர் விரும்புகின்றார். நாம் செய்யும் காரியங்கள் ஆண்டவருக்கு மனநிறைவையும் மனமகிழ்ச்சியையும் கொடுக்குமென்றால் அவைகளை மனஉறுதியோடும் உற்சாகத்தோடும் செய்யக் கடமைப்பட்டுள்ளோம்.

### 2. தன்னால் இயன்றதை செய்தாள் :

இவள் விலையேறப்பெற்றதை தன் ஆண்டவருக்கு மனமகிழ்ச்சியுடன் கொடுத்து ஆண்டவர் மீதுள்ள தமது அன்பை வெளிப்படுத்தினாள். சாதாரண கூலியாள் ஒரு வருடம் வேலை செய்தால் எவ்வளவு பணம் கிடைக்குமோ அவ்வளவாய் விலையேறப்பெற்றதைத் தன் ஆண்டவருக்குக் கொடுத்து மகிழ்ந்தாள். ஆண்டவரும் அவளைப் பாராட்டி இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள் என மகிழ்வுடன் கூறினார். மாற்கு 14:8. அவர் நம்முடைய நிலமையையும், தகுதியையும் அறிந்திருக்கிறார். தகுதிக்கு ஏற்றவாறு நற்கிரியைகளை செய்வது அவருக்குப் பிரியம் நம்முடைய வாழ்விலும் இயன்ற காரியங்களை உண்மையாய், ஊக்கத்தோடு, உற்சாகத்தோடு செய்ய நம்மை ஆயத்தப்படுத்துவோம்.

### 3. சரியான நேரத்தில் செய்தாள் :

அவள் ஏற்ற சமயத்தில் செய்தாள். என் சரீரத்தில் தைலம் பூச முந்திக் கொண்டாள் என்று இயேசு சொல்லுகிறார். அவள் இன்னொரு சமயம் இந்த பரிமள தைலம் பூசலாம் என்று நினைத்திருந்தால் அந்த நேரம் ஒருபோதும் அவளுக்கு கிடைத்திருக்காது. இந்த நேரம் தான் ஆண்டவர் அந்த வீட்டிற்கு வந்த கடைசி நேரம். ஆண்டவர் மரிக்கபோகிறார் என்பதை அறியாவிட்டாலும் அவர் மீது வைத்திருந்த அன்பினால் செய்தாள். நாமும் நம்முடைய வாழ்வில் கால தாமதம் செய்யாமல் நம்முடைய தாலந்துகளை, திறமைகளை, வரங்களை ஆண்டவரின் நாம மகிமைக்கென்று செய்வோம். நாம் செய்ய நினைக்கும் நற்கிரியைகளை, தீர்மானிக்கும் காரியங்களை ஏற்ற வேளையில் செய்வோம். இன்று செய்யக்கூடியதை இன்றே செய்வோம். அதை நன்றே செய்வோம். அப்படிப்பட்ட பாக்கியமான வாழ்வை, ஆண்டவரால் புகழப்படும் வாழ்வை நம் ஒவ்வொருவருக்கும் தந்து ஆசீர்வதித்து நடத்துவாராக.

இறைப்பணியில்,
உங்கள் சகோதரி,
திருமதி. சாலினி ஜெயக்குமார்.

**ஜெபியுங்கள்**

**தேர்வு எழுதும் நம் பிள்ளைகள் அனைவருக்காகவும் சபையார் ஊக்கமாக ஜெபியுங்கள்.**



# உதவி போதகர் மடல்

உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் அனைவரையும் அன்புடன் வாழ்த்துகிறேன்.

## திருமறை ஆய்வு
## ரோமர் 7-ஆம் அதிகாரம்

“நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துமூலமாய் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். ஆதலால் நானே என் மனதினாலே தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்கும், மாம்சத்தினாலேயோ பாவப்பிரமாணத்துக்கும் ஊழியஞ்செய்கிறேன்”. (ரோமர் 7:25)

அப்போஸ்தலனாகிய பவுல் நியாயப்பிரமாணம், பாவப்பிரமாணம் என்னும் இரு பிரமாணங்களைக் குறிப்பிட்டு, அவற்றின் முரண்பாடுகளை இவ்வதிகாரம் முழுவதும் எழுதியிருக்கிறார். இவை இரண்டுமே இரு துருவங்கள். எச்சூழலிலும் ஒன்றோடொன்று பொருந்தாது என்பதைத் தெளிவுபடுத்த சில கேள்விகளைக் கேட்டு, பதில் சொல்லிப் புரிய வைக்கிறார்.

“நியாயப்பிரமாணம்” என்னும் பொதுவான சொற்றொடர் பழைய ஏற்பாட்டில் பல பிரமாணங்களாக வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

1. விடுதலைப் பிரமாணம் - யாத். 12-13
2. நீதிப்பிரமாணம் - யாத். 20-23
3. ஆசாரியர், லேவியர் பிரமாணம் - யாத். 28-30, லேவி. 21-22
4. ஓய்வுநாள் பிரமாணம் - யாத். 20:8-11, 31:12-17, 35:1-3, லேவி 16:29-31, 23:1-3
5. ஆசரிப்புக்கூடார பிரமாணம் - யாத். 35-40
6. பலிப்பிரமாணம் - லேவி. 1-10
7. உணவுப்பிரமாணம் - லேவி. 11
8. தொழுநோயாளி சுத்திகரிப்பு பிரமாணம் - லேவி. 13,14
9. வாழ்வுப் பிரமாணம் - லேவி 12,15,20
10. பண்டிகைப் பிரமாணம் - லேவி 23-25

இவற்றின் வழியாக மனுக்குலம் இறைநீதியையும், இறைச் சித்தத்தையும் நிறைவேற்ற வேண்டும் என்பது தான் கடவுளின் எதிர்பார்ப்பு.

ரோமர் 7-ஆம் அதிகாரத்தில் நியாயப்பிரமாணத்திற்கும், பாவப் பிரமாணத்திற்கும் இடையே இருக்கின்ற வித்தியாசங்களை பவுல் வரிசைப்படுத்துகிறார்.

## நியாயப்பிரமாணம் பற்றிய பவுலாரின் கருத்துக்கள்

1. ஒரு மனுஷன் உயிரோடிருக்குமளவும் அவனை ஆளுகை செய்கிறது (7:11)
2. நியாயப்பிரமாணத்தின் கட்டுகளிலிருந்து விடுதலை உண்டு (7:6)
3. எது பாவம் என்னும் அறிவை ஊட்டுகிறது (7:7)
4. பரிசுத்தமானது, நீதியானது, நன்மையானது (7:12)
5. ஆவிக்குரியதாயிருக்கிறது (7:14)
6. தேவனுடையது (7:22)
7. மனதளவில் நியாயப்பிரமாணத்திற்கு ஊழியம் செய்கிறேன் (7:25)

## பாவப்பிரமாணம் பற்றிய பவுலாரின் கருத்துக்கள்

1. சகலவித இச்சைகளையும் பிறப்பிக்கிறது (7:8)
2. மனிதனை வஞ்சித்து அழிக்கிறது (7:11)
3. அதிக பாவத்தை உருவாக்குகிறது (7:13)
4. மாம்சத்திற்குரியது (7:14)
5. மனம் விரும்பாததைச் செய்யத்தூண்டுகிறது (7:14)
6. நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாய் போராடுகிறது (7:23)
7. மனிதனை சிறைப்படுத்துகிறது (7:23)

நியாயப்பிரமாணம், பாவப்பிரமாணம் இவை இரண்டிலும் எது பிரதானமானது? எனும் வினாவுக்கு பவுலடியாரின் கருத்துக்கள் நல்ல பதிலை நமக்குத் தந்திருக்கின்றன.

ரோமர் 7:2,3 இல் காண்கிறபடி, “மணமான பெண் ஒருவர் கணவன் உயிரோடு இருக்கும் வரையில்தான் திருமணச் சட்டத்திற்கு கட்டுப்பட்டிருக்கிறார். கணவன் இறந்துவிட்டால், கணவனோடு வாழ வேண்டும் என்ற சட்டத்திலிருந்து விடுதலை பெறுகிறார்”. இங்கே, கணவனையும், மனைவியையும் இணைக்கின்ற உடன்படிக்கையாக நியாயப்பிரமாணம் இருப்பதைக் காணலாம்.

பிரியமானவர்களே! எக்காலமும் அழியாத மணவாளனாகிய இயேசு கிறிஸ்துவோடு, மணவாட்டி சபையாகிய நம்மை இணைக்கின்ற உடன்படிக்கையாக தேவனுடைய நியாயப்பிரமாணத்தை ஏற்றுக்கொண்டு, பாவப் பிரமாணத்தை மேற்கொண்டு பரிசுத்தமாய் வாழ இந்த தவக்காலங்களில் தீர்மானம் எடுப்போம். பரிசுத்த ஆவியானவர் நமக்கு துணைநிற்பாராக. ஆமென்.

இறைப்பணியில் உங்களுடன்,
அருட்திரு. V. சாமுவேல் ஜெபராஜ்.
உதவிப் போதகர்.

அன்புக்கும் சமாதானத்துக்கும் காரணராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், இம்மாதத்திலும் தூதன் வாசகர்களை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

## பாடல் சொல்லும் வரலாறு

## பாடல்: "யுத்தம் செய்வோம், வாரும், கிறிஸ்து வீரரே!"

## (Onward, Christian Soldiers)

இங்கிலாந்தில் கிறிஸ்தவப் போதகர்களாக பணியாற்றி, அத்துடன் கவிஞர்களாகத் திகழ்ந்து, அழியாப் புகழைப் பெற்ற பெருமக்களுள் போதகர் பாரிங்கோல்டு ஒருவராவார். எந்த சபைக்குக் குருவாகச் சென்றாலும், வெகு சீக்கிரத்தில் அச்சபை மக்களின் நன்மதிப்பைப் பெற்று வந்தார். அவருடைய தூய வாழ்க்கையும், சபை மக்களின் நல்வாழ்விற்காக அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகளும் அதற்குக் காரணங்களாகும்.

பாரிங்கோல்டு ஒவ்வொரு நாளும் பெரும் பாகத்தை வேத வாசிப்பிலும், ஜெபத்திலும், தியானத்திலும் செலவிட்டு வந்தார்.

இங்கிலாந்தில் யார்க்ஷயர் பகுதியில் ஹார்பரி (Horbury) என்ற கிராமம் ஒன்று உள்ளது. அங்குள்ள கிறிஸ்தவச் சபையின் மக்கள் பரிசுத்த ஆவியின் திருநாளைச் சிறப்புடன் கொண்டாடி வந்தனர். அன்று ஓய்வு நாள், பள்ளியிலுள்ள சிறுவர் சிறுமிகள் பாடல்களை பாடிக்கொண்டு சபைமக்கள் குடியிருந்த தெருக்கள் வழியாக ஊர்வலம் வந்து இறுதியில் ஆலயத்திற்குச் சென்று தேவ ஆராதனையில் பங்கெடுப்பது வழக்கம். அவ்வாறு ஊர்வலம் வரும்பொழுது பாடுவதற்குத் தகுந்த பாடல்களை அதற்கு முந்தின ஞாயிற்றுக்கிழமையன்று போதகருடன் கலந்து தெரிந்தெடுப்பதுண்டு.

தான் பணியாற்றிய ஆலயத்திலிருந்து பரிசுத்த ஆவியின் பண்டிகைக்குச் சுமார் இரண்டு வாரங்களுக்கு முன் போதகர் பாரிங்கோல்டு புதிதாக ஹார்பரிக்கு மாற்றப்பட்டார். அங்கு பவனியில் செல்கையில், பிள்ளைகள் பாடுவதற்குத் தகுதியான பாடலைத் தெரிந்தெடுக்கும்படி அவரைக் கேட்டுக்கொண்டனர்.

“கவித்திறனுள்ள ஒரு கிறிஸ்தவச் சபையின் ஞானப்பாட்டுகள்” என்ற இரண்டு பாடல் புத்தகங்களில் இத்தகைய நிகழ்ச்சிகளில் பாடக்கூடிய பாடல்களிருந்தன. இவர் அவைகளைப் பாடிப்பார்த்து பரிசுத்தாவியின் திருநாளன்று பவனியில் பிள்ளைகள் பாடக்கூடிய பாடலொன்றைத் தெரிந்தெடுப்பதில் முனைந்தார். அவைகள் ஒன்றும் அவருக்குத் திருப்தி அளிக்கவில்லை. எனவே அவ்விழாவிற்கேற்றதாக ஒரு பாடலைத் தாமே இயற்ற முற்பட்டார். அதைக் குறித்து சிந்தனை செய்கையில் அடுத்தடுத்த சபையிலுள்ள சிறு பிள்ளைகள் கிறிஸ்துவின் நாமத்தில் மகிழ்வுடன் செல்லும் காட்சி அவர் மனக்கண்முன் நின்றது. “கிறிஸ்து சபை” வல்ல சேனை போன்றது என்ற எண்ணம் அவருடைய உள்ளத்தில் பட்டது. சிறுவர் சிறுமிகள் கிறிஸ்துவின் கொடியின்கீழ் சாத்தானுக்கு விரோதமாகப் போர் செய்ய வேண்டுமென்ற எண்ணம் அவர் மனதில் எழுந்தது. இரவில் வெகுநேரம் உட்கார்ந்து அதை குறித்துச் சிந்தனை செய்து “யுத்தம் செய்வோம் வாரும் கிறிஸ்து வீரரே” என்று ஆரம்பிக்கும் பாடலை அவர் எழுதி முடித்தார். பரிசுத்த ஆவியின் திருநாளன்று அந்த ஊரில் பவனிச் சென்ற சிறுவர் சிறுமிகள் முதன் முதலாக இப்பாடலை பாடிச் சென்றனர்.

சிறுபிள்ளைகள் பவனி செல்லும்பொழுது பாடுவதற்காக இயற்றப்பட்ட இப்பாடல் சிறப்புப்பெற்று உலகமெங்குள்ள கிறிஸ்தவ மக்களால் இப்பொழுதும் பாடப்பட்டு வருகின்றது. சர். ஆர்தர் சலிவன் அமைத்த “பரி. கெட்ரூட்” என்ற ராகம் இப்பாட்டிற்கு கொடுக்கப்பட்டது. அதற்குப்பின் முன்னிலும் அதிகமாய் கிறிஸ்தவர்கள் இப்பாடலைப் பாடலானார்கள்.

பாரிங்கோல்டு எழுதிய பாடல்கள் அநேகமுள்ளன. அவை கிறிஸ்தவ மக்களுக்கு புத்துணர்ச்சியைக் கொடுத்து, கிறிஸ்தவ விசுவாசத்தில் அவர்களை வேரூன்ற செய்வனவாயுள்ளன. தூய வாழ்க்கையைக் கடைபிடித்து வந்த அவர், எளிய நிலையிலுள்ள மக்களுக்கு பல்வேறு வகைகளில் உதவி செய்து வந்தார். அவர் 1924 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2-ஆம் தேதி தமது 90 ஆம் வயதில் மரணமடைந்தார். நமதாண்டவரிடம் அன்பை செலுத்தும் ஒருவர் மக்களுக்கும் சிறந்த தொண்டு செய்யக்கூடும் என்பதற்கு இக்கவிஞருடைய வாழ்க்கை எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

உங்களுக்காக ஜெபிக்கும்,
திருமதி. செலின் சாமுவேல்,
உதவி ஆயரம்மா.

சபைமக்கள் அனைவருக்கும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இனிய வாழ்த்துக்கள். கர்த்தரின் பெரிதான கிருபையால் இந்த லெந்து கால மாதத்தை ஆசீர்வதித்து, சந்தோஷத்தால் நிரப்புவாராக.

நமது சபையின் புதிய Bank account இப்பொழுது உபயோகத்தில் உள்ளது. February மாதம் முதல் நாம் நமது constitution படி வரவு செலவுகளை Bank account மூலமாக பயன்படுத்துகிறோம். Dhms.4 million Fixed deposit ஆக வைக்கப்பட்டுள்ளது.

நமது சபைக்குழுவில் எடுக்கப்பட்ட சில தீர்மானங்கள்:

1. சபையார் மனமுவந்து VBS நாட்களில் தாயகத்திலிருந்து வருகை தரும் VBS Directorகளை உபசரிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். சபைக்குழு உறுப்பினர்கள் தங்களை அணுகும்போது மனமுவந்து உங்கள் பங்களிப்பை அளியுங்கள்.

2. ஆலய Registration மற்றும் நிலத்திற்கான விண்ணப்பங்கள் Follow up செய்யப்படுகிறது.

3. Blood donation compaign-ல் உற்சாகமாக நண்பர்களுடன் கலந்து கொள்ளுங்கள். “Help others and you will be helped.”(Proverbs 11:25)

4. VBS-க்கான அனைத்து ஏற்பாடுகளுக்கும் சபைக்குழுவுடனும், Volunteers-வுடனும் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். அனேக teachers தேவையுள்ளதால் ஊழியம் செய்ய விரும்புகிறவர்கள் நமது போதகரையும், VBS Director Mrs.Sheeba Prabhakar அவர்களையும் அணுகவும்.

5. VBS Final day programme March 21-ம் தேதி மாலை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

6. நாம் ஏற்கனவே அறிவித்தபடி Annual Subscription card, March முதல் வாரத்தில் இருந்து வழங்கப்படும். சபையார் குடும்பத்திற்கு ஒன்று வீதம் பெற்றுக்கொண்டு உங்கள் காணிக்கைகளை இதன்மூலம் அளியுங்கள்.

7. நமது புதிய ஆயருக்கான விண்ணப்பம் Moderator-ன் ஆய்வில் உள்ளது. நமது வேண்டுகோளின்படி திருநெல்வேலி அல்லது தூத்துக்குடி நாசரேத் Diocese-ல் இருந்து அனுப்ப பிரயாசப்படுகிறார்கள். நமக்கு நல்லதொரு மேய்ப்பன் கிடைக்க ஊக்கத்துடன் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

8. நமது Sharjah C Prayer cell மிகவும் சிறப்பாக Mrs.Merlin Vijil அவர்கள் மூலமாக இடம் கொள்ளாமட்டும் வளர்ச்சி அடைந்துள்ளது. அவர்களின் சிறப்பான ஊழியத்திற்காக சபைக்குழுவின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் இந்த Prayer cell இரண்டாகப் பிரிக்கப்பட்டு Sharjah D Prayer cell leader ஆக Mrs.Josephine Wesley அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

நம் சபையில் புதிய அங்கத்தினர்களாக சேர்ந்துள்ள அனைவரையும் ஜெபத்தோடு வரவேற்போம்.

| S. No. | NAME | MEM. NO. | AREA |
|---|---|---|---|
| 1 | Mr. Stalin Raja A.S. | 2503 | Dubai |
| 2 | Mr. T. Koil Pillai | 2504 | Dubai |
| 3 | Mr. Nixon Jeyaraj | 2505 | Dubai |
| 4 | Mr. A.Justin Kumar | 2506 | Dubai |
| 5 | Mr. Vijai Lal S. | 2507 | Dubai |
| 6 | Mr. Alwyn John Peter Gnanamuthu | 2508 | Dubai |
| 7 | Mr. Moses Philip Gnanamuthu | 2509 | Dubai |
| 8 | Mr. Babu Raj Singh G | 2510 | RAK |

சிங் ரெத்னம், செயலர்.

## சபை சந்திப்பு

இந்த மாதம் Sharjah C பகுதியிலுள்ள
சபையார் இல்லங்களை சந்திக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.
மற்ற பகுதியில் உள்ளவர்கள் எந்த நேரத்தில் அழைத்தாலும்
சபையாரை இல்லங்களில் சந்திக்க ஆயத்தமாய் இருக்கிறோம்.

சபை போதகர்.

# கழுதைமேல் இயேசு எருசலேம் வந்தார்

ஆறுநாளில் எருசலேமில் பஸ்கா பண்டிகை
அங்கே செல்ல இயேசுவும் ஆயத்தம்
ஊர்விட்டு பஸ்காவுக்கு வந்த மக்கள் ஆனந்தம்
இயேசுவை எதிர்கொள்ள எழுச்சிப் பயணம்

குருத்தோலை கையிலே
கருத்தோசை வாயிலே
பெருந்தேடலை வழியிலே
பரந்தோடலை விழியிலே

பஸ்காவில் வந்தோரே
விஸ்வாசங் கொண்டாரே
இஸ்ரவேலின் ராஜாவே
ஸ்தோத்தரிப்பு கர்த்தராலே

ஓசன்னாப் பாட்டாலே
இயேசுவைத் தொட்டாரே
நேசமனக் கூட்டாரே
நிசமாக இசைத்தாரே

சீயோனின் குமாரத்தியே
சோகமாகாய் பயத்தாலே
தேயத்திலே உன்ராஜா
கழுதையின் குட்டிமேலே

முன்னுரைபோல் தன்வரவிலே
கழுதையின் குட்டிமேலே
இன்பயணம் எடுத்தாரே
இயேசுவும் எருசலேமே.

ஆதாரம் : யோவான் 12:12-19.

கவிதை எண் : 174.

ஆக்கம் : மணிமுத்து.

# நீங்கள் கிறிஸ்தவரா...

என்னாலே உன் நாட்கள் பெருகும்,
உன் ஆயுசின் வருஷங்கள் விருத்தியாகும்.
நீதிமொழிகள் 9:11

உலகில்
எந்த திசை நோக்கி
ஓடிவரும் நதியும்
கடைசியில்
தேடிவந்து
கலரும் இடம்
கடல்தான்.
உலகின்
மனுக்குலம் யாவும்
செய்யும்
ஜெபமும், தவமும்
வந்தடைவது
கர்த்தரிடமே.
கர்த்தர்
ஒருவரே
கடவுள்.
தொன்று தொட்டு
இன்று வரை
உலகில் தோன்றும்
உயிரினம் ஒன்றும்
நிரந்தரம் இல்லை.
வாலிப முடுக்கு
என்பதும்
உடல் பலம்
என்பதும்
ஆட்டம் பாட்டம்
என்பதும்
நூறு வயதுவரை
தொடருமா...?
நரை வந்து
திரை போடாதா...?
"வரும்முன் விழித்தெழு
பைபிள் வழி காட்டும்"
சாத்தானின்
மத்தாப்பூ
மாயை வந்து
மனதை மயக்கும்.
மகிழ்ச்சி இதுவென
நினைக்கும்.
கண்களால்
காணும் இன்பம்
துன்ப வலையாகும்.
உலகின்
நச்சான இச்சையை
துச்சமென
தூக்கி வீசு
மாசற்ற மனதுடன்
முழுவதுமாக
கர்த்தரிடம்
தஞ்சம் புகுந்துவிடு.
"வரும்முன் விழித்தெழு
பைபிள் வழி காட்டும்"
உணவில்
வாய்க்கு
ருசி என்று
சாப்பிடுவது எனில்
நோய் வந்து
வருத்தும்.
ருசி என்பது
வாய்க்கும்
நாக்கும்
வரைதான்.
பசிக்கு...
சுத்தமான, சத்தமான
உணவை
அளவுடன் சாப்பிடு.
Fast food
Waste food (waste)
உண்மை இதுவென
உணர்க.
"வரும்முன் விழித்தெழு
பைபிள் வழி காட்டும்"
அதிகாலை....
கர்த்தரைத் தேடு
பைபிளின்...
ஞானத்தை நாடு
எந்த நிலையிலும்
ஜெபம் செய்ய
மறவாதே.
வாழ்வு தருவதும்
வயது தருவதும்
வளம் தருவதும்
மகிழ்ச்சி தருவதும்
உன் ... வாழ்வை
வருஷங்களாக்கி
விருத்தியாக்குவதும்
உன்... மக்களின்
மக்களை கண்டு
களிப்புற்று
செழிப்புற்று
ஜெகம்தனில்
புகழ்பெற்று
வாழ வைப்பதும்
கர்த்தரே.
உலகில்
எது தோன்றுகிறதோ
அது கர்த்தரிடம்
இருந்தே
தோன்றுகிறது.
காலம் அவை
வந்தடைவதும்
கர்த்தரிடமே.
உணர்க.
"வரும்முன் விழித்தெழு
பைபிள் வழிகாட்டும்".

என்றும் அன்புடன், T. ராஜ்குமார். Mens Fellowship.

# கவிதைச்சோலை

அரவணைக்கும் அன்னையாய் - எனை
ஆதரிக்கும் ஆதாரமாய்
இன்னல் துடைக்கும் தாதியராய்
ஈந்தளிக்கும் கொடை வள்ளலாய்
உயர்குடும்ப தலைவியாய்
ஊக்குவிக்கும் உற்ற தோழியாய்
எண்ணிக் கடமையாற்றும் காரிகையாய்
ஏற்புடையது செய்யும் குணஸ்திரீயாய்
ஐயம் விடுவிக்கும் ஆசிரியையாய்
ஒற்றுமை நல்லிணக்கம் காக்கும் காவலராய்
ஓங்கி நிற்கும் பண்போடு
ஔடதமாய் புருஷனுக்கு மணிமகுடமாய்
விளங்கும் புதுமைப் பெண்களை
வாழ்த்திப் போற்றுவோம் - இந்நாளில்
மகளிர் தின நன்னாளில்

- புனிதா தாஸ்

## NEW ARRIVALS



"பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்"

Ria Joanna
D/o. Mr.Rajkumar Manickam & Mrs.Lydia Catherine Rajkumar
11-02-2015

Baby Boy
S/o. Mr.Jeya Nirmal Prasanth & Mrs.Sahaya Salini
18-02-2015

Jonathan Josiah
S/o. Mr.Christin Solomon Walter & Mrs.Jeya Kiruba Solomon
19-02-2015

பெண்கள் பகுதி

# USEFUL KITCHEN TIPS

1.வெண்டைக்காய் ஒன்றோடொன்று ஒட்டாமல் இருக்க சமைக்கும் முன் சிறிது எலுமிச்சைச் சாறு தெளிக்கவும்.

2.கீரை வேகவிடும்போது சிறிது எண்ணெய் சேர்த்தால் பசுமையாக, ருசியாக இருக்கும்.

3.இட்லி வேகவைக்கும் குக்கர் தண்ணீரில் காய்ந்த கறிவேப்பிலை இலைகள், கொத்தமல்லி தழை, எலுமிச்சைத் தோல் போட்டால் இட்லி வாசனையாக இருக்கும்.

4.கிரேவி செய்யும்போது கொஞ்சம் வேர்கடலையைத் தோல்நீக்கி நீரில் ஊறவைத்து அரைத்து சேர்த்தால் ரிச்சாக ருசியாக இருக்கும்.

5.சர்க்கரை டப்பாவில் 2 அல்லது 3 கிராம்புகள் போட்டு வைத்தால் எறும்பு வராது.

6.சமையல் முடிந்ததும் ரெகுலேட்டர் Off செய்யவேண்டும். ரப்பர் குழாயில் வெடிப்பு உள்ளதா என அவ்வப்போது சோதித்து 18 மாதத்திற்கு ஒருமுறை மாற்றவேண்டும்.

7.காய்ந்த புதினாஇலைகள், கறிவேப்பிலைகளை அரிசிக்குள் போட்டு வைத்தால் பூச்சி வராது. சாதமும் வாசனையாக இருக்கும்.

8.Lemon பிழிவதற்கு முன், வெந்நீரில் போட்டால் அதிக ஜூஸ் கிடைக்கும்.

9.Mixi Jar-ல் ஒரு கைப்பிடி கல் உப்பு போட்டு சுழலவிட்டால் Mixi blade கூர்மையாகும்.

10.குக்கர் கேஸ்கட்டை கால்மணி நேரம் தண்ணீரில் போட்டு சுத்தப்படுத்தி தனியாக வைத்தால் நீண்டநாள் உழைக்கும்.

11.நீரில் மஞ்சள்தூள் போட்டு, அதில் காய்கறிகள் நறுக்கி போட்டால் புழு பூச்சி இருந்தால் மேலே மிதக்கும்.

12.Mixi-ல் சிறிது எண்ணெய் தடவி உளுந்துவடைக்கு அரைத்தால் ஒட்டாமல் வரும்.

13.பருப்பு டப்பாவில் சிறிது பெருங்காயத் துண்டுகள் போட்டால் வண்டு வராது.

14.ஆம்லெட் போடும்போது முட்டையுடன் சிறிது பால் சேர்த்தால் Soft ஆக இருக்கும்.

Sheeba Sigamani.

# பெற்றோர்களுக்கு...

அன்பு பெற்றோர்களுக்கு,

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, நம் தேவன் "எனக்காக வளர்த்திடு" என்று நம் கரங்களில் கொடுக்கப்பட்ட பிள்ளைகளை தேவனுக்காக, அதாவது தேவசித்தம் நிறைவேற வளர்ப்பதற்கு இந்த கட்டுரை உதவும் என்று கர்த்தருக்குள் நம்புகின்றேன்.

ஏசாயா 55:10-11 : வேதம் தேவனுடைய வார்த்தையை விதைக்கு ஒப்பிடுகிறது. விதை விதைக்கப்பட வேண்டும், நீர் பாய்ச்சப்பட வேண்டும், பராமரிக்கப்பட வேண்டும், இல்லையென்றால் அது தனித்திருக்கும். அதன் மூலம் நாம் எந்த பலனையும் பெற்றுக்கொள்ள முடியாது.

அதுபோலவே வசனம் வேத புத்தகத்தில் இருப்பதனால் மட்டும் நமக்கு எந்த பலனும் கிடைக்கப்படுவதில்லை. வசனத்தை சூழ்நிலைக்கேற்ப எடுத்து விசுவாசித்து, தியானித்து, ஜெபத்தில் அதைச் சொல்லி ஜெபிக்கும்போது நிச்சயம் ஏற்ற காலத்தில் பலன் கிடைக்கும்.

பிள்ளைகள் நமக்குக் கொடுக்கப்பட்டதின் நோக்கத்தை வேதத்தின் மூலம் நாம் அறிந்து, அவைகளை தினமும் சொல்லி ஜெபிக்கவேண்டும். இயேசுவின் நாமத்தில் கேட்கிற விண்ணப்பங்களுக்கு நிச்சயம் பதில் உண்டு. நம் கர்த்தர் நல்லவர்.

1. ஆதி 1:28 : மனிதனை ஆண்டுகொள்ள படைத்த ஆண்டவரே! எங்கள் பிள்ளைகள் எல்லாவற்றையும் ஆள்பவராக மாற்றும்.
2. ஆதி. 3:1 : ஆதி பெற்றோர் சாத்தானின் தந்திரத்திற்கு ஏமாறினதுபோல எங்கள் பிள்ளைகள் தீயோனின் தந்திரங்களுக்கு ஏமாறாமல் காத்தருளும்.
3. ஆதி 4:5 : காயீன் ஆபேலிடம் பொறாமை கொண்டது போல அல்ல. எங்கள் பிள்ளைகள் அன்பாக, ஒற்றுமையாக வாழ கிருபை செய்யும்.
4. ஆதி. 26:35 : ஏசா தன் பெற்றோருக்கு மனநோவாயிருந்தது போல அல்ல. எங்கள் பிள்ளைகள் எங்களுக்கு மனமகிழ்ச்சியைத் தருபவர்களாக வாழ கிருபை தாரும்.
5. ஆதி. 39:2,3 : கர்த்தர் யோசேப்போடு இருந்தது போல எங்கள் பிள்ளைகளோடும் இருந்து காரியசித்தி உள்ளவர்களாக்கும். அவர்கள் செய்வதை வாய்க்கப்பண்ணும்.
6. ஏசாயா 60:22 : சின்னவன் ஆயிரமும், சிறியவன் பலத்த ஜாதியுமாவான் என்றபடி எங்கள் பிள்ளைகளை ஆயிரமும் பலத்த ஜாதியுமாக்கும்.

7. ஏசாயா 44:3 : எங்கள் சந்ததியின் மேல் ஆவியையும், ஆசீர்வாதத்தையும் ஊற்றும்.
8. தானியேல் 1:17 : எங்கள் பிள்ளைகளுக்கு சகல எழுத்திலும், ஞானத்திலும், அறிவையும், சாமர்த்தியத்தையும் தாரும்.
9. ஏசாயா 54:13 : எங்கள் பிள்ளைகள் கர்த்தரால் போதிக்கப் பட்டிருப்பார்களாக. அவர்கள் சமாதானம் பெரிதாக இருக்கட்டும்.
10. ஏசாயா 54:17 : எங்கள் பிள்ளைகளுக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோவதாக.
11. எபேசியர் 1:17 : கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தேவனும், மகிமையின் பிதாவுமானவரை அறிந்து கொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை எங்கள் ஒவ்வொருவருக்கும் தாரும். (பவுல் அப்போஸ்தலரின் ஜெபம்).
12. எபேசியர் 3:18,19 : கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து, அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, எங்களுக்கும், பிள்ளைகளுக்கும் அனுக்கிரகம் பண்ணுவீராக. (பவுல் அப்போஸ்தலரின் ஜெபம்).

ஜெபிப்போம், ஜெயம் பெறுவோம். நம் சந்ததிகள் பரிசுத்த சந்ததிகளாக வாழ வழி உருவாக்குவோம். தேவன் தாமே நம்மிலும் நம் பிள்ளைகளிலும் மகிமைப்படுவாராக. ஆமென்.

Shyla Davis.

## திருமறைப் பாட ஒழுங்குகள் - மார்ச் 2015

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 06-03-2015 | ஜெபத்தில் நிலைத்திருத்தல் | 2 இராஜா. 20:1-11 | 1 தெசலோ. 5:12-22 | மாற்கு 7:24-30 | 116 |
| 13-03-2015 | கடவுளின் விடுதலைப்பணியில் பெண்கள் | யாத்தி. 1:15-22 | ரோமர் 16:1-12 | லூக்கா 8:1-3 | 148 |
| 20-03-2015 | சிலுவை மேசியா காலத்தின் புதிய காட்சி | உபாகமம் 18:15-22 | 2 கொரி. 1:3-11 | லூக்கா 18:35-43 | 73 |
| 27-03-2015 | குருத்தோலை பவனி | சகரியா 9:1-12 | 2 கொரி. 6:11-18 | மத்தேயு 21:1-17 | 24 |

# கர்த்தரின் வார்த்தை

## 2 இராஜாக்கள் 3-ம் அதிகாரம்

காற்றும் இல்லை
மழையும் இல்லை
நதிநீர் நிறைந்திட
வழியும் இல்லை
வருந்தின தேவஜனம்
நெருக்கின பகைஞர் கூட்டம்
வந்தது கர்த்தரின் வார்த்தை
நிறைந்தது தேசம் தண்ணீரால்
வழிந்தது வாய்க்கால் நன்நீரால்

ஆதவன் உதிக்க
தண்ணீரும் ஜொலிக்க
மயங்கியது சித்தம்
கண்டது இரத்தம்

கொள்ளைக்கு வந்தனர் பாளையத்தில்
பகைஞர் .......
கொள்ளையாயிப்போயினர்
கர்த்தரின் கரம் .....
பராக்கிரமம் செய்யும்.
அவர் ஜனம்
அவரை விசுவாசிக்க
அவர் புகழ் பாட
பகைஞரை முறியடிக்கும்.
அந்த வார்த்தை
கர்த்தரின் வார்த்தை.

திருமதி.சிமி ஜெபின்.



**ஜெபியுங்கள்**

**தேர்வு எழுதும் நம் பிள்ளைகள் அனைவருக்காகவும் சபையார் ஊக்கமாக ஜெபியுங்கள்.**

## பாமாலை - கீர்த்தனை

**06-03-2015**

| | | |
|---|---|---|
| பாமாலை | 2 | அலங்கார வாசலாலே |
| பாமாலை | 106 | நான் பாவிதான் |
| கீர்த்தனை | 109 | பாதகன் என் வினை தீர் ஐயா |
| கீர்த்தனை | 165 | விந்தைக் கிறிஸ்தேசு ராசா |
| கீர்த்தனை | 92 | உன்றன் சுயமதியே |

**13-03-2015**

| | | |
|---|---|---|
| பாமாலை | 42 | மா மாட்சி கர்த்தர் |
| பாமாலை | 149 | சிலுவை சுமந்தோனாக |
| கீர்த்தனை | 4 | ஆத்துமமே என் முழு உள்ளமே |
| கீர்த்தனை | 93 | காலத்தின் அருமையை |
| கீர்த்தனை | 17 | தோத்திரம் செய்வேனே |

**20-03-2015**

| | | |
|---|---|---|
| பாமாலை | 5 | உம்மைத் துதிக்கிறோம் |
| பாமாலை | 198 | இயேசுவே கல்வாரியில் |
| கீர்த்தனை | 97 | பாவி இன்றே திரும்பாயோ |
| கீர்த்தனை | 159 | என் சிலுவை எடுத்து |
| கீர்த்தனை | 147 | பரனே திருக்கடைக்கண் பாராயோ |

**27-03-2015 (குருத்தோலை பவனி)**

| | | |
|---|---|---|
| பாமாலை | 67 | ஓசன்னா பாலர் பாடும் |
| பாமாலை | 68 | தயாள இயேசு தேவரீர் |
| கீர்த்தனை | 61 | ஓசன்னா பாடுவோம் |
| கீர்த்தனை | 62 | பவனி செல்கின்றார் |
| கீர்த்தனை | 179 | ஜீவ வசனங் கூறுவோம் |

# திருச்சபை ஜெபநாள் 01-03-2015 (முதல் ஞாயிறு)

"முழு இருதயத்தோடும் கூப்பிட்டேன், கர்த்தாவே, என் ஜெபத்தைக் கேளும், உம்முடைய பிரமாணங்களைக் கைக்கொள்ளுவேன்." சங்கீதம் 119:145

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிறு தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- இம்மட்டும் நம்மைப் பாதுகாத்து, பராமரித்து இப்புதிய மாதத்தைக் காணச்செய்த தேவனுக்கு நன்றி ஏறெடுப்போம். கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக அவரைத் துதிப்போம்.
- திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறுவோம்.
- 30-01-2015 அன்று ஜெபல் அலி ஆலயத்தில் நடைபெற்ற பாடல் ஆராதனை சிறப்பாக நடைபெற கர்த்தர் பாராட்டின கிருபைகளுக்காக அவரைத் துதிப்போம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக,

- மிஷனரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனரி ஸ்தாபனங்களுக்காக
- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக
- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனைக்கு அர்ப்பணமுள்ள செவிலியர் கிடைக்க ஜெபிப்போம்.

## நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- இந்திய நாட்டுக்காக, நாட்டின் தலைவர்கள் மற்றும் அதிகாரம் வகிப்போர் அனைவருக்காகவும், தேசத்தின் வளத்துக்காகவும், வளர்ச்சிக்காகவும், மனிதநேயமும், மத நல்லிணக்கமும் பெருகவும் ஜெபிப்போம். நல்ல இயற்கைச் சூழ்நிலைகள், மழை வளத்துக்காக ஜெபிப்போம்.
- அரபு ஐக்கியக் குடியரசுக்காக, அதன் தலைவர்களுக்காக, இங்கு வாழும் அனைத்துமக்களின் சமாதானத்துக்காக,
- உலகத் தலைவர்களுக்காக, சமாதானத்துக்காக, உலகில் தேவ ஆளுகைக்காக
- சுற்றியுள்ள நாடுகளில் வாழும் மக்கள் அமைதியோடும் சமாதானத்தோடும் வாழ கர்த்தர் கிருபை செய்ய வேண்டிக்கொள்வோம்.

## நமது ஜெப மன்றாட்டுகள்

- இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதல்கள், தேவ ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலம் ஆகிய தேவ கிருபைக்காக,
